முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2024 யூலை

## (304) நிறுவனம் மற்றும் தனிநபர் வரியியல்

(Corporate & Personal Taxation)

2024-08-11
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 09
வினாக்கள் : 09

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் ஏதேனும் எடுகோள்களை மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

கீழ்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

(1) **ரவி** என்பவர் ஒரு இந்தியப் பிரஜை ஆவார். அவர் 2022 மே 01 ஆந் திகதி தொடக்கம் 2024 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை இலங்கைக் கப்பல் ஒன்றில் பணியாற்றினார்.

(2) **அமரா** இலங்கையில் பிறந்தவர் என்பதுடன் தொழிலுக்காக 2023 சனவரியில் அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர்ந்திருந்தார். அவர் இலங்கையிலுள்ள வீட்டிலிருந்து வாடகை வருமானத்தை ஈட்டுகிறார்.

(3) ஐக்கிய இராச்சியத்தின் பிரஜையான **சாரா,** 2023 மார்ச் 15 இலிருந்து செயற்படும் வண்ணம் மூன்று ஆண்டுகள் காலப்பகுதிக்காக இலங்கையிலுள்ள ஐக்கிய இராச்சிய உயர் ஸ்தானிகராலயத்தில் அதிகாரி ஒருவராக நியமிக்கப்பட்டார். அவருக்கு கொழும்பில் தொடர்மாடிக் குடியிருப்பொன்று வழங்கப்பட்டதுடன் அவர் கடமையைப் பொறுப்பேற்றதன் பின்னர் இலங்கையை விட்டுச் சென்றிருக்கவில்லை.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, வரிமதிப்பாண்டு 2023/24 இற்கான இலங்கையின் வரிவிதிப்பு நோக்கத்திற்காக மேற்படி தனியாளின் வதிவிட அந்தஸ்தை **விபரிக்குக.**

(05 புள்ளிகள்)

## வினா 02

**ஹெல ரச** ஆனது உள்நாட்டுச் சந்தைக்கு இனிப்புகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளதுடன் அது சமூக பாதுகாப்புப் பங்களிப்பு வரிக்குப் (SSCL) பதிவு செய்யப்பட்டுள்ளது. 2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான **ஹெல ரச** இன் புரள்வு (turnover) ரூபா 35,000,000/-.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க SSCL சட்டத்தின் கீழ் வரி விதிக்கத்தக்க நபர்கள் இருவரை (02) **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(b) மேற்படி காலாண்டிற்காக **ஹெல ரச** இனால் செலுத்தப்பட வேண்டிய SSCL ஐக் **கணிக்குக.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

*ஹொரணையில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றிற்கு அருகிலுள்ள 2 ஏக்கர் காணியை விற்பதற்கான விளம்பரமொன்றை **சரத்** பார்த்துள்ளார். அவர் அந்தக் காணியை ரூபா 16 மில்லியன் விலைக்கு கொள்வனவு செய்வதாக காணி உரிமையாளரான **சொய்ஸா**வுடன் உடன்படிக்கை செய்து, முற்பணமாக ரூபா 1 மில்லியனை செலுத்தியுள்ளார். அவர் கொடுக்கல் வாங்கல்களை ஆறு மாத காலத்தினுள் நிறைவு செய்வதாக இணங்கியுள்ளார். அதன் பிறகு, அவர், நிலத்தை 15 பேர்ச்சஸ் கொண்ட துண்டங்களாகப் பிரித்து, அதில் ஒரு துண்டத்தைச் **சொய்ஸா**வுக்காகவும் மற்றுமொரு துண்டத்தை தனக்காகவும் வைத்துக் கொண்டார். எஞ்சிய துண்டங்கள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டன. **சரத்** மீதி ரூபா 15 மில்லியனையும் **சொய்ஸாவுக்குச்** செலுத்தியதுடன், இந்த முழுக் கொடுக்கல் வாங்கல்களில் இருந்து இலாபத்தைச் சம்பாதித்திருந்தார். இந்தக் கொடுக்கல் வாங்கல் மீதான வருமான வரியின் தாக்கத்தை அறிய அவர் விரும்புகிறார்.*

**நீங்கள் செய்ய வேண்டியது :**

*"ராம் ஈஸ்வரா எதிர் CIR"* என்ற வழக்கைத் தொடர்புபடுத்தி, **சரத்** ஈட்டிய இலாபம் வருமான வரிக்கு உட்பட்டதா என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

(a) தொழில் ரீதியாக ஒரு வழக்கறிஞராக உள்ள **டாமியன்** என்பவர் தனது குடும்பத்துடன் கனடாவுக்கு குடிபெயரத் திட்டமிட்டுள்ளார். இதனால், வரிமதிப்பாண்டு 2023/24 காலப்பகுதியில் பின்வரும் மூலதனத் தன்மையுடைய கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டிருந்தார்.

| சொத்து வகை | கிரயம் (ரூபா) | 30.09.2017 இல் சந்தைப் பெறுமதி (ரூபா) | கிடைத்த மறுபயன் (ரூபா) |
|---|---|---|---|
| நிருமாணிக்கப்பட்டு, 2014 இலிருந்து பயன்படுத்தப்பட்ட வதிவிட இல்லம் | 9,500,000 | 13,200,000 | 16,000,000 |
| அவரது வணிகத்திற்காக 2012 இலிருந்து பயன்படுத்தப்பட்ட அலுவலகக் கட்டடம் | 10,500,000 | 12,500,000 | 13,000,000 |
| 2014 இல் கொள்வனவு செய்யப்பட்டு **ABC லிமிட்டெட்** இற்கு வாடகைக்கு விடப்பட்ட கட்டடம் | 18,000,000 | 22,500,000 | 26,800,000 |

**நீங்கள் செய்ய வேண்டியது :**

மேற்படி கொடுக்கல் வாங்கல்கள்மீது **டாமியனால்** செலுத்த வேண்டிய மூலதன நய வரியைக் (CGT) **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட செனரா (தனியார்) கம்பனி** 2023 டிசெம்பர் 31 இல் அதன் பங்குதாரர்களுக்கு ரூபா 150,000,000/- என்ற மொத்தப் பங்கிலாபத்தை வெளிப்படுத்தி, 2024 சனவரியில் செலுத்தியிருந்தது. இந்தப் பங்கிலாபம், வரிமதிப்பாண்டு 2022/23 இற்கான இலாபத்திலிருந்து செலுத்தப்பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

மேலே செலுத்தப்பட்ட பங்கிலாபத்தில் கழிக்கப்பட வேண்டிய முற்பண வருமான வரியைக் (AIT) **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**"ரன் சலு"** என்பது உள்நாட்டுச் சந்தையில் ஆடைகளை வாங்கி, விற்பனை செய்யும் வணிகத்தில் ஈடுபட்டுள்ள, பெறுமதிசேர் வரிக்கு (VAT) பதிவுசெய்யப்பட்ட ஒரு நபராகும். 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பின்வரும் தகவல்கள் வணிகத்தின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப் பட்டுள்ளன :

(1) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான வருமான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன (VAT உள்ளடக்கப்படாத) :

| | ரூபா |
|---|---|
| உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்தறி ஆடைகளின் விற்பனை | 3,786,000 |
| இறக்குமதி செய்யப்பட்ட ஆடைகளின் விற்பனை | 27,764,000 |

(2) கம்பனியானது காலாண்டில் கீழ்வரும் உள்ளீட்டு வரியைச் செலுத்தியிருந்தது :

| | ரூபா |
|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட ஆடைகள் மீது | 1,325,000 |
| உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்தறி ஆடைகளின் போக்குவரத்து மீது | 234,000 |
| CEO இனால் பயன்படுத்தப்படும் மோட்டார் காரின் பராமரிப்புச் செலவினங்கள் மீது | 14,500 |
| அலுவலகச் செலவினங்கள் மீது | 464,000 |

(3) முன்னைய காலாண்டிலிருந்து முன்கொணரப்பட்ட மிகை உள்ளீட்டு VAT தொகை ரூபா 36,000/-.

(4) வணிகம், மாதாந்த VAT தவணைக் கட்டணங்களாக ரூபா 2,000,000/- செலுத்தியிருந்தது.

*(நியம VAT வீதம் 18% எனக் கருதுக.)*

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2024 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காகச் செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) பெறுமதிசேர் வரியை (VAT) **மதிப்பிடுக.** (10 புள்ளிகள்)

## வினா 06

ஹோட்டல் பாடசாலை ஒன்றின் மாணவர்களான **ராதா, தாரா** என்னும் இரு நண்பர்களால் **Cake Factory** என்ற பங்குடமை வியாபாரம் முன்னெடுக்கப்படுகிறது. அவர்கள் வியாபாரத்தின் இலாப, நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்துகொள்ள இணங்கியுள்ளனர்.

கீழ்வரும் தகவல்கள் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிகர இலாபம் ரூபா 8,450,000/-.

(2) நிகர இலாபத்தைக் கணிக்கும்போது கீழ்வரும் செலவினங்கள் கழிக்கப்பட்டுள்ளன :

- ஆண்டிற்கான பங்காளர்களின் சம்பளங்கள் :

| | ரூபா |
|---|---|
| **ராதா** | 1,200,000 |
| **தாரா** | 1,800,000 |

- கணக்குப் பதிவு வேலைகள் **ராதாவின்** சகோதரியினால் செய்யப்படுவதுடன் அவருக்கு மாதாந்தம் ரூபா 25,000/- சம்பளம் வழங்கப்பட்டது.
- **ராதா,** பங்குடமைக்கு கடனொன்றை வழங்கியுள்ளதுடன் அதற்கான வட்டியாக **ராதாவுக்கு** ரூபா 38,000/- செலுத்தப்பட்டுள்ளது.
- அலுவலக வளாகம் **தாராவுக்கு** சொந்தமானது. இதற்காக அவருக்கு மாதாந்தம் ரூபா 50,000/- வாடகை செலுத்தப்பட்டுள்ளது.
- கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு நன்கொடையாக ரூபா 100,000/- வழங்கப்பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

வரிமதிப்பாண்டு 2023/24 இற்காக பங்குடமை செலுத்த வேண்டிய வருமான வரியை **மதிப்பிடுக.**

(10 புள்ளிகள்)

## வினா 07

**வரையறுக்கப்பட்ட புளூ ஸ்கை கம்பனி** ஆனது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனி ஆகும். இக்கம்பனி வரிமதிப்பாண்டு 2022/23 இற்கான வருமான வரித் திரட்டினை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் சமர்ப்பித்திருக்கவில்லை. உதவி ஆணையாளர் தனது தீர்ப்பின்படியான தவறிய மதிப்பீடு ஒன்றை 2024 சனவரி 05 ஆந் திகதி வழங்கியிருந்தார்.

**வரையறுக்கப்பட்ட புளூ ஸ்கை கம்பனியின்** ஒரு பணிப்பாளரான **ஷெனிலா** என்பவர் ஒரு வதிவுள்ள தனியாள் ஆவார். அவர் தெரியாமல், வரிமதிப்பாண்டு 2022/23 இற்காக ரூபா 82,000/- மிகையாக தனியாள் வருமான வரியைச் செலுத்தியிருந்ததுடன் உரிய நேரத்தில் வருமான வரித் திரட்டையும் தாக்கல் செய்திருந்தார்.

**வரையறுக்கப்பட்ட புளூ ஸ்கை கம்பனியின்** வரி ஆலோசகராக நீங்கள் இருப்பதாகக் கருதுக.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) வரிமதிப்பாண்டு 2022/23 இற்கான வருமான வரித் திரட்டைத் தாக்கல் செய்வதற்கான உரிய திகதியைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) நிருவாக மீளாய்வுக்கான கோரிக்கையை முன்வைக்கும்போது, **வரையறுக்கப்பட்ட புளூ ஸ்கை கம்பனி** திருப்தி செய்ய வேண்டிய மூன்று (03) நிபந்தனைகளைக் **குறிப்பிடுக.** *(மதிப்பீட்டிற்கு எதிரான ஒரு வலிதான மேன்முறையீடு)*. (05 புள்ளிகள்)

(c) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, மிகையாகச் செலுத்திய வருமான வரியை மீளப் பெறுவதற்கு **ஷெனிலா**வுக்கு உரித்துள்ளதா என்பதை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரையறுக்கப்பட்ட சுவ சாரா (தனியார்) கம்பனி** இலங்கையில் வதிவுள்ள ஒரு கம்பனி ஆகும். இது ஏற்றுமதிச் சந்தைக்காக பெரிய அளவில் மூலிகைப் பொருள்களைத் தயாரிக்கிறது. **வரையறுக்கப்பட்ட சுவ சாரா (தனியார்) கம்பனியின்** கீழ்வரும் தகவல்கள் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுடன் தொடர்புடையனவாகும் :

(1) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட சுவ சாரா (தனியார்) கம்பனியின்** பொழிப்பாக்கப்பட்ட வருமானக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது :

| | **ரூபா** |
|---|---|
| ஏற்றுமதி விற்பனைகள் | 1,654,000,000 |
| விற்பனைக் கிரயம் | (892,000,000) |
| **மொத்த இலாபம்** | **762,000,000** |
| ஏனைய வருமானம் | 1,448,000 |
| நிருவாக மற்றும் விநியோகச் செலவினங்கள் | (386,500,000) |
| நிதிச் செலவினங்கள் | (4,800,000) |
| **நிகர இலாபம்** | **372,148,000** |

(2) ஏனைய வருமானங்களின் கூறுகள் :

| | **ரூபா** |
|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரண விற்பனை மீதான இலாபம் | 38,000 |
| நிலையான வைப்புகள் மீதான வட்டி வருமானம் (மொத்தம்) | 260,000 |
| பங்கிலாப வருமானம் – பெற்ற பங்கிலாபத்திலிருந்து | 1,150,000 |
| | **1,448,000** |

(3) நிருவாக மற்றும் விநியோகச் செலவினங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன :

- ஆண்டிற்கான தேய்மானக் கட்டணம் ரூபா 44,680,000/-.
- ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 26,732,000/-.
- ஆண்டின்போது, உற்பத்திச் செயன்முறையைப் பரிசீலிப்பதற்காக பிரான்ஸ் நாட்டிலிருந்து எதிர்காலக் கொள்வனவாளர் ஒருவர் வருகை தந்திருந்தார். அவரை மகிழ்விப்பதற்காக கம்பனி ரூபா 450,000/- இனைச் செலவு செய்திருந்தது.
- கம்பனி ரூபா 1,000,000/- பெறுமதியான மூலிகைப் பொருள்களை ஆயுர்வேதத் திணைக்களத்திற்கு நன்கொடையாக வழங்கியிருந்தது. மேலும், கம்பனியின் முன்னாள் ஊழியர் ஒருவரின் இருதய சத்திரசிகிச்சைக்காக ரூபா 200,000/- நன்கொடை வழங்கியிருந்தது.

(4) நிதிச் செலவினங்கள், காலக் கடன்கள் மீது செலுத்திய ரூபா 4,800,000/- வட்டியை உள்ளடக்கியுள்ளன.

(5) 2024 மார்ச் 31 இல் உரிமையாண்மையும் பரிப்புக்களும் கீழ்வருமாறு :

| | ரூபா |
|---|---|
| வழங்கப்பட்ட பங்கு மூலதனம் | 8,000,000 |
| கைக்கொள் இலாபம் | 1,450,000 |
| உரிமையாண்மை | 9,450,000 |
| செலுத்தவேண்டிய கடன்கள் | 40,000,000 |

(6) 2024 மார்ச் 31 இல் ஆதனம், பொறி மற்றும் உபகரண விபரங்கள் கீழ்வருமாறு :

| சொத்துக்கள் | கொள்வனவு ஆண்டு | கொள்வனவுக் கிரயம் (ரூபா) |
|---|---|---|
| காணி | 2016/17 | 120,000,000 |
| கட்டடங்கள் | 2016/17 | 84,000,000 |
| மோட்டார் லொறிகள் | 2020/21 | 65,000,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 2016/17 | 96,000,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 2023/24 | 145,000,000 |
| அலுவலக உபகரணம் | 2021/22 | 1,759,000 |
| கணினிகள் | 2022/23 | 2,435,000 |
| கணினி மென்பொருள் | 2023/24 | 1,200,000 |
| | | **515,394,000** |

- ரூபா 22,550,000/- கிரயத்தில் வரிமதிப்பாண்டு 2018/19 இல் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு இயந்திரம் 2023 டிசெம்பரில் ரூபா 3,000,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.
- கணினி மென்பொருளின் பயன்தரும் ஆயுட்காலம் 4 ஆண்டுகளாகும்.

(7) பதவியை இராஜினாமா செய்த ஊழியர் ஒருவருக்கு பணிக்கொடையாக ரூபா 500,000/- செலுத்தப்பட்டது.

(8) கம்பனியானது வரிமதிப்பாண்டு 2023/24 இற்கான வருமான வரியின் காலாண்டுத் தவணைக் கொடுப்பனவுகளாக ரூபா 50,000,000/- செலுத்தியிருந்தது.

(9) நிலையான வைப்பின் வட்டி வருமானத்தில் முற்பண வருமான வரியாக (ATI) / நிறுத்தி வைத்தல் வரியாக (WHT) ரூபா 13,000/- இனை வங்கி கழித்திருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

வரிமதிப்பாண்டு 2023/24 இற்கான **வரையறுக்கப்பட்ட சுவ சாரா (தனியார்) கம்பனியின்** கீழ்வருவன வற்றை **மதிப்பிடுக** :

(a) வரிமதிக்கத்தக்க வருமானம்

(b) வரிவிதி வருமானம்

(c) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(d) செலுத்த வேண்டிய / (மேலதிகமாகச் செலுத்திய) மீதி வருமான வரி.

*(குறிப்பு: ஏதாவது செலவுகளை அனுமதிப்பதற்கான அல்லது அனுமதிக்காது விடுவதற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.)* (25 புள்ளிகள்)

## வினா 09

**திமுது** என்பவர் ஒரு வதிவுள்ள தனியாள் ஆவார். அவர் தற்போது **சிற்றி லங்கா பீ.எல்.சீ.** இல் சிரேஷ்ட வரி முகாமையாளராகப் பணியாற்றுகிறார்.

**திமுது** தொடர்பான கீழ்வரும் தகவல்கள் வரிமதிப்பாண்டு (இதன் பின்னர் ஆண்டு எனக் குறிப்பிடப்படும்) 2023/24 தொடர்பில் தரப்பட்டுள்ளன :

(1) **ஊழியத்திலிருந்தான வருமானம் :**

- **சிற்றி லங்கா பீ.எல்.சீ.** இடமிருந்து பெற்ற மொத்தச் சம்பளம் மாதமொன்றுக்கு ரூபா 260,000/-.
- கம்பனி அவருக்கு எரிபொருளுடன்கூடிய மோட்டார் கார் ஒன்றை வழங்கியுள்ளது. அதன் பயன்பாட்டிற்கான ஓட்டப் பதிவுகள் (running records) பேணப்படவில்லை.
- அவர் தனது அலுவலகத்திற்கு அருகில், பம்பலப்பிட்டியில் உள்ள வாடகை வீடொன்றில் வசிக்கிறார். வீட்டிற்கான மாதாந்த வாடகை ரூபா 60,000/-. இது அவராலேயே செலுத்தப் படுகிறது. அவர், வதிவிடத்திற்கான கொடுப்பனவாக கம்பனியிடமிருந்து மாதாந்தம் ரூபா 80,000/- இனைப் பெற்றுக் கொள்கிறார்.
- கம்பனி, அவரின் கைத்தொலைபேசிக்கான கட்டணத்தை ஏற்பதுடன், ஆண்டின் காலப்பகுதியில், அவருடைய தொலைபேசிக் கட்டணங்களுக்காக ரூபா 85,000/- இனை மீளளிப்புச் செய்துள்ளது.
- கம்பனியின் சகல ஊழியர்களுக்கும் ஒரு மருத்துவக் காப்புறுதித் திட்டம் வழங்கப்பட்டுள்ளதுடன், ஆண்டின் காலப்பகுதியில் கம்பனியால் **திமுது** சார்பில் ரூபா 60,000/- செலுத்தப்பட்டுள்ளது.
- ஆண்டிற்காகக் கழிக்கப்பட்டுள்ள தனியாள் முற்பண வருமான வரி (APIT) ரூபா 204,600/-.

(2) **திமுது** தனிப்பட்ட சேவைநாடுநர்களுக்கு வரி ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக சொந்தமாக வரி ஆலோசனை நிறுவனமொன்றை நடத்துகிறார். 2023/24 ஆம் ஆண்டிற்கான அவரது வணிகம் தொடர்பான வருமான, செலவின விபரங்கள் கீழ்வருமாறு :

| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| ஆலோசனைச் சேவை வருமானம் | | 4,800,000 |
| **கழி : கொடுப்பனவுகள்** | | |
| பயிற்சியாளர்களுக்கான சம்பளம் | 540,000 | |
| வரி ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதன் மீது வெளி ஆலோசகர்களுக்குச் செலுத்திய தொழில்சார் கட்டணங்கள் | 750,000 | |
| பரிசுகள் | 820,000 | |
| வாடகை (அவரது வதிவிடம் தொடர்பில் ரூபா 720,000/-) | 960,000 | |
| தேய்மானம் - தளபாடங்கள் | 65,000 | (3,135,000) |
| **நிகர இலாபம்** | | **1,665,000** |

- ரூபா 650,000/- கிரயத்தில் 2019/20 இல் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் மீது தேய்மானம் விதிக்கப்பட்டுள்ளது.
- பரிசுகள், பொலநறுவை பொது வைத்தியசாலைக்கு நன்கொடையாக அளிக்கப்பட்ட ரூபா 540,000/- தொகையை உள்ளடக்குவதுடன் ஏனைய பரிசுகள் சேவை பெறுநர்களுக்கு புத்தாண்டில் வழங்கப்பட்ட பரிசுகளுடன் தொடர்புடையவையாகும்.

(3) **திமுதுவின்** சொந்த வீடு குருநாகலில் உள்ளது. அது மாதாந்த மொத்த வாடகை ரூபா 60,000/- இற்கு கம்பனி ஒன்றிற்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இந்த வீட்டின் சோலைவரி மதிப்பீடு ரூபா 250,000/- ஆகும். சோலைவரி 20% இல் **திமுதுவினால்** செலுத்தப்பட்டுள்ளது.

(4) ஆண்டின் காலப்பகுதியில், **திமுது** கீழ்வரும் வட்டி வருமானங்களைப் பெற்றுள்ளார் :

| **விபரம்** | **பெற்ற திகதி** | **தொகை (மொத்தம்) (ரூபா)** | **கழிக்கப்பட்ட AIT (WHT) (ரூபா)** |
|---|---|---|---|
| நிலையான வைப்பு மீதான வட்டி | 31.12.2023 | 1,300,000 | 65,000 |
| திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி | 20.01.2024 | 600,000 | - |

(5) ஆண்டின் காலப்பகுதியில், **திமுது** அவரது முதலீடுகளிலிருந்து கீழ்வரும் வருமானங்களைப் பெற்றுள்ளார் :

- விலைகோரப்பட்ட பொதுக் கம்பனியொன்றின் பங்குகளின் விற்பனை மூலமான இலாபம் :

| **கம்பனி** | **கிரயம் (ரூபா)** | **விற்பனை வருமானம் (ரூபா)** | **இலாபம் / (நட்டம்) (ரூபா)** |
|---|---|---|---|
| ரண் சிஹின பீ.எல்.சீ. | 945,000 | 1,200,000 | 255,000 |

- விலைகோரப்பட்ட பொதுக் கம்பனிகளிலிருந்து பெற்ற பங்கிலாப வருமானம் (நிகர) ரூபா 799,000/- என்பதுடன் பங்கிலாப வருமானத்திலிருந்து பொருத்தமான AIT / WHT கழிக்கப்பட்டுள்ளது.

(6) வரிமதிப்பாண்டு 2023/24 இற்கான வருமான வரியின் காலாண்டுத் தவணைக் கொடுப்பனவுகளாக அவர் ரூபா 1,000,000/- செலுத்தியுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

வரிமதிப்பாண்டு 2023/24 இற்கு **திமுதுவுக்காக** கீழ்வருவனவற்றை **மதிப்பிடுக**:

(a) வரிவிதி வருமானம்

(b) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(c) செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) வருமான வரி

(d) வரிவிலக்கு வருமானம், ஏதாவது இருப்பின்.

*(**குறிப்பு:** ஏதாவது வருமானம் வரி விதிக்கத்தக்கது அல்ல எனின், அதனைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.)* (25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |